கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.209/2015 மற்றும் அ.வ.எண்.210/2015

பி.வா.சா.1 - மாரியப்பன்

நாள்.06.03.2026 த/பெ - பழனிசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) 1ம் பிரதிவாதி கோவிலில் நான் செயல்அலுவலராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கோவிலில் என்று முதல் நாள் செயல்அலுவலராக உள்ளேன் என்றால் 24.01.2024 முதல் பணிபுரிந்து வருகிறேன். இதற்குமுன்பு எங்கு பணிபுரிந்து வந்தேன் என்றால் திருநெல்வேலி டவுண், அருள்மிகு தொண்டர்கள் நயினார் திருக்கோவில் செயல்அலுவலராக பணிபுரிந்து வந்தேன். இவ்வழக்கு சொத்தானது சர்வே எண்.1197 மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 84 செண்ட் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்து சம்மந்தமாக 1 பிரதிவாதி கோவிலுக்கு யாராவது நன்கொடை ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. இவ்வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் இவ்வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்குபாத்தியப்பட்ட என்பதை காட்ட ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா தவிர்த்து வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்கள் குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.06 17:35:29 +0530